**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**
**வழக்கு எண்: CC 19/2025**
**வழக்கு சாட்சி :PW2 (LW3)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தனலெட்சுமி | வயது | : | 48 |
| கணவர் பெயர் | : | மாணிக்கம் | தொழில் | : | கூலிவேலை |
| கிராமம் | : | பெருமா நாடு | தாலுக்கா | | |

**Solemnly affirmed by Thiru.Veeramanikandan , JA of this Court in accordance with the provisions of Act X of 1873**

**Accused Present.**

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act-1969 Section -6(2) on the day 03rd day of August 2026.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 - Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**
**Adthar Card of the Witness verified.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :-**

1. நான் தற்போது பெருநாட்டில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மாமியார் ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது கணவரின் தம்பி ஆவார். இந்த சம்பவத்திற்கு முன்பே எங்களுக்கும் எதிரிக்கும் பல வருடங்களாக சொத்து சம்பந்தமாக பிரச்சனை இருந்தது. கடந்த 04.06.2024 ம் தேதியன்று இரவு சுமார் 08.30 மணிளவில் நான் எனது கணவர் மற்றும் எங்களது வீட்டில் இருந்தோம். 07.30 மணியில் இருந்து ஆஜர் எதிரி அவரது வீட்டிற்குள் இருந்தே அசிங்மாக பேசினார்.

2. பின்னர் 08.00 மணியிலிருந்து 08.45 வரை வேலி அடைத்து வைத்திருந்த இடத்தை கட்டையால் அடித்து வேலியை தகர்த்து விட்டு எங்கள் வீட்டிற்குள் வந்து புண்டா மகனே தகாத வார்த்தையால் சொல்லி வீட்டை வீட்டு வெளியே செல்லுமாறு திட்டினார். அவரது சத்தம் கேட்டு அருகில் இருந்த எனது மாமியார் அங்கு வந்தார். ஆஜர் எதிரி அவரை இழுத்து அவரை ஒரு சுற்று சுற்றி விட்டு கிழே தள்ளி விட்டார். மேலும் எனது மாமியார் வைத்திருந்த கம்பி பிடித்து அவருடைய வலது இடுப்பு பகுதியில் நான்கு, ஐந்து அடித்து விட்டார். அதில் அவருக்கு காயம் ஏற்பட்டு மயங்கி விழுந்தார். எதிரி எனது மாமியரை அடித்து கொண்டிருந்தபோது அவருடைய மகன்கள் இருவரும் அங்கு இருந்தார்கள்.

3.எனது மாமியாருக்கு தண்ணீர் கொடுத்தோம் ஆனால் தண்ணீர் வெளியே வந்து விட்டது. நானும் எனது கணவரும் சத்தம் போட்டோம். யாரும் வர வில்லை. பின்னார் எனது மகளுக்கு போன் செய்து விட்டு இந்த ஊர் தலைவரிடம் இந்த விவரத்தை சொல்லிவிட்டு எனது மாமியாரை ஆட்டோவில் புதுக்கோட்டை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்தோம். அங்கு சிகிச்சையில் Xray எடுத்து பார்த்து எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பதாக சொன்னார்கள். இரண்டு நாட்கள் மருத்துவமனையில் இருந்து பின்னர் வலி அதிகமாக இருப்பதாக சொல்லி வேறு

இடத்திற்கு கட்டு போட்டு கொள்ளலாம் என்று சொல்லி வீட்டிற்கு வந்து விட்டார். பின்னர் அவரை துவரங்குறிச்சிக்கு அழைத்து சென்று சிகிச்சை செய்தோம். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். (**சாட்சி கூடுதலாக சம்பவம் முடித்து ஆட்டோவிற்கு போன் செய்து காத்து கொண்டிருந்த சமயத்தில் எதிரி அவரது துணிகளை அவிழ்த்து விட்டு நிர்வணமாக என்னை பார்த்து வா என அழைத்ததாக சாட்சியம் அளிக்கிறார்**).

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

1. திருமணம் ஆகி எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் 31 வருடங்கள் ஆகிறது. எதிரிக்கு திருமணம் ஆகி எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் 25 வருடங்கள் ஆகிறது. எனது மாமனார் இறந்து எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால் 2013 ல் இறந்தார். அவர் இறந்ததில் இருந்து எனது மாமியார் தனியாக வசித்து வருகிறார் என்றால் சரிதான். அவருக்கு என்று தனியாக ஒரு செட்டு அமைத்து உள்ளார் என்றால் சரிதான். அதை எதிரி தான் போட்டு கொடுத்தார் என்றால் சரிதான். எதிரி எனது கணவரின் உடன்பிறந்தவர் என்றால் சரிதான். அவர்களுக்கு பாகம் பிரிக்கவில்லை என்றால் சரிதான். ஏன் இதுவரை பாகம் பிரிக்கவில்லை என்றால் எதிரி முன் வரவில்லை. எனது கணவர் மூத்தவர் என்பதால் அவர் தான் பாகம் பிரிக்க வேண்டும் என்றால் பத்திரம் எதிரியிடம் உள்ளது. நான் சொல்வது போல் பத்திரம் எதுவும் எதிரி வசம் இல்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, இந்த சம்பவத்திற்கு 6 மாதத்திற்கு முன்பு தான் பத்திரத்தை கொடுத்தார்.

2. எனது மாமியாருக்கு 90 வயது இருக்கும் என்றால் சரியல்ல, 80 வயது இருக்கும். அவர் குச்சி ஊன்றி தான் நடப்பார் என்றால் சரிதான். அவ்வாறு குச்சி ஊன்றி நடந்தால் முதுகு வளைந்து இருக்கும் என்றால் இல்லை, அவர் தடுமாறி நடப்பதால் குச்சி ஊன்றி நடப்பார். அவருக்கு முதுகு வளைத்து இருக்கும் என்றாலும், அவர் தடுமாறி நடப்பதால், குச்சி நடப்பார் என்றாலும் சரியல்ல. இந்த சம்பவத்திற்கு எத்தனை நாட்களுக்கு முன்பு எனது மாமியார் எனது வீட்டிற்கு வந்தார் என்றால் 2 வருடத்திற்கு முன்பாக வந்தார், பின்பு எதிரி அழைத்து சென்று விட்டார். மீண்டும் 6 மாதம் கழித்து வந்தார். நான் சொல்வது போல் 6 மாதத்திற்கு முன்பு வரவில்லை என்றாலும், சம்பவம் நடந்தாக சொல்லப்படும் நாளிலிருந்து 10 நாட்களுக்கு முன்பு அவரை அழைத்து வந்தோம் என்றாலும் சரியல்ல.

3. எனது மாமியார் 10 வருடங்களாக தனியாக இருக்கும் நிலையில் சம்பவத்தின் போது மட்டும் ஏன் அழைத்து வந்தேன் என்றால் எதிரியிடம் அடி பொறுக்க முடியாமல் எங்களிடம் வந்தார். எதிரி எனது மாமியாரை அடித்தாக சொல்வது குறித்து ஊரில் பஞ்சயாத்து பேசப் பட்டதா என்றால் பேசப்பட்டது. நான் சொல்வது அவ்வாறு பேசப்படவில்லை என்றாலும், வழக்கிற்காக நான் மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது மாமியாரை குடும்ப சொத்திற்காக எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்தேன் என்றால் சரியல்ல. எனது மாமியாரை திரும்ப அழைத்து செல்ல எதிரி எங்கள் வீட்டிற்கு வந்தார் என்றாலும், அவ்வாறு எனது மாமியாரை அழைத்து செல்லும் போது நான் தடுத்து பிடித்து இழுத்ததால் அவர் கீழே விழுந்தார் என்றாலும் சரியல்ல.

4. நான் சொல்வது போல் எதிரி எனது மாமியாரை அடிக்கவில்லை என்றாலும், நான் இவ்வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல. சொத்து

பிரச்சனை சம்பந்தமாக எனது மாமியாரை துண்டி விட்டு புகார் கொடுக்க வைத்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தையும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. கூடுதலாக நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தையும் போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. பின் யோசனை செய்து சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

5. என்னை போலிசார் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். மருத்துவமனையில் 2 நாட்கள் கிசிச்சை செய்ததாக சொல்லியுள்ளநிலையில் அ.சா.1 மருத்துவ செலவோடு எதிரி தான் பார்த்துவந்தார் என்றால் சரிதான். ஊரில் பஞ்சாயத்து செய்து எதிரியை பார்க்க சொன்னார். எங்களுக்கும் எதிரிக்கும் இடையே சொத்து பிரச்சனைக்காக எதிரி வழக்கில் சிக்க வைக்கவேண்டும் என்பதற்காக எதிரி மீது அ.சா.1 யை வைத்து பொய் புகார் கொடுத்து அதற்கு அனுசரனையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து / படிக்க கேட்டு சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்து செய்தார்.

**//sd//– Tmt.M.SATHATHUNISHA, B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், இலுப்பூர் .**